தமிழ் வாழ்க

# தமிழ்ப் பொழில்

துணர்: ரு … மலர்:

THE THANJAVUR MAHARAJA SERFOJI'S SARASWATHI MAHAL LIBRARY
THANJAVUR.
24 AUG 1981

திருவள்ளுவர் யாண்டு உ௰௧உ
துன்மதி: ஆவணி
(1981 ஆகச்டு-செப்டம்பர்)

கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடு

பொழிற்றொண்டர்:
திரு அரங்க வே சுப்பிரமணியன், பி. ஏ.,

# தமிழ்ப் பொழில்

துணர் : ருரு　　　உள்ளுறை　　　மலர் : ரு

## உள்ளுறை


பக்கம்

1. கவிதைச் சிந்தனைகள் ... 97

பேராசிரியர் வ. பெருமாள்

எம். ஏ; பி. டி; எம். ஆர். எஸ்; எப். எப். ஐ;
தலைமைப் பேராசிரியர் &
தலைமை ஆராய்ச்சி நெறியாளர்,
கோலார் தங்கவயல் கருநாடகம்.

2. மொழி முதனிலை
இறுதிநிலை எழுத்துக்கள் ... 111

பாவலரேறு ச. பாலசுந்தரம்

துணை முதல்வர்,
கரந்தைப் புலவர் கல்லூரி.

# தமிழ்ப் பொழில்

கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

| துணர் | திருவள்ளுவர் யாண்டு உ0கஉ | மலர் |
| --- | --- | --- |
| ருரு | துலைமதி-ஆவணி | ரு |
| | 1981 ஆகஸ்ட்—செப்டம்பர் | |


தமிழ் வாழ்க

## கவிதைச் சிந்தனைகள்

பேராசிரியர் வ. பெருமாள்,

எம். ஏ; பி. டி; எம். ஆர். ஏ. எஸ்; எப். எப். ஐ.,

தலைமைப் பேராசிரியர் & தலைமை ஆராய்ச்சி நெறியாளர்,

பண்பகம்,

சொர்ண நகர், இராபர்ட்சன் பேட்டை,

கோலார் தங்க வயல் (K. G. F.)

கருநாடகம்.

**திருக்கவிதை:**

'திரு' என்னும் சொல்லுக்குக் கண்டோரால் விரும்பப்படும் தன்மை என்பது பொருள். தெய்விகத் தன்மை வாய்ந்தவற்றைத் 'திரு' என்னும் அடைமொழியைப் பயன்படுத்தி நம் முன்னோர் குறிப்பிட்டனர். திருமகள் என்னும் இறைவியின் பெயரிலும், திருமால் என்னும் இறைவன் பெயரிலும் திரு அமைந்துள்ள பாங்கு ஈண்டு நோக்கத்தக்கது. இறையருளைத் திருவருள் என்றும், இறையடியைத் திருவடி என்றும் குறிப்பது வழக்கம். இறைவன் சிறப்பாகக் குடி கொண்டுள்ள ஊர்கள் யாவும் தெய்விக மணங் கமழும் ஊர்களாகவே காட்சியளிக்கின்றன. அத்தகைய ஊர்களின் பெயரில் திரு அடைமொழியாக அமைந்திருக்கின்றது. திருக்கச்சி, திருக்கஞ்சனூர், திருக்கடம்பந்துறை, திருக்கடம்பூர், திருக்கடவூர், திருக்கடன் மல்லை, திருத்தடிக்குளம், திருக்கடிகை, திருப்பரங்குன்றம், திருத்தணிகை, திருப்பதி, திருவாரூர், திருக்கழுக்குன்றம், திருக்காட்டுப்பள்ளி, திருவரங்கம், திருக்கோவிலூர், திருவண்ணாமலை, திருச்செந்தூர் முதலிய ஊர்ப்பெயர்கள் இவண் குறிப்பிடத்தக்கன.

மக்கட் சிறப்புப் பெயர்களில் 'திரு' என்னும் அடைமொழி அமைந்திருப்பதும் உண்டு. திருவள்ளுவர், திருத்தக்கத்தேவர், திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர் முதலிய பெயர்களை இங்கு குறிப்பிடலாம்.

ஒரு நங்கையும் நம்பியும் இல்லற வாழ்க்கைத் தொடங்கும் நன்னாளைத் திருமணம் என்று குறிப்பிடுகின்றோம். திருவாட்டி, திருவாளர், திருமதி, திருச்செல்வி, திருச்செல்வன், உயர்திரு, மறைத்திரு, திருமிகு முதலிய சிறப்பு அடைமொழிகளில் 'திரு' வீற்றிருப்பது தமிழ் மக்களின் இறைப்பற்றையும் இறையுணர்வையும் புலப்படுத்துகின்றது. இறைப்பெயர், ஊர்ப்பெயர், மக்கட்பெயர் ஆகியவற்றில் திரு அமைந்திருப்பதுபோல் தெய்விகத் தன்மை வாய்ந்த கவிதைகள் வெறுங்கவிதைகளாகத் தோன்றாமல் திருக்கவிதைகளாகத் திகழ்கின்றன.

''நடராசர் பாட்டே நறும் பாட்டு
ஞாலத்தார் பாட்டெல்லாம் வெறும்பாட்டு

சிதம்பரப் பாட்டே திருப்பாட்டு
சீவர்கள் பாட்டெல்லாம் தெருப்பாட்டு

அம்பலப் பாட்டே அருட்பாட்டு
அல்லாத பாட்டெல்லாம் மருட்பாட்டு''

என்று திருப்பாட்டுக்கு வள்ளலார் நல்லிலக்கணம் வகுக்கின்றார். திருக்குறள், திருத்தொண்டர் புராணம், திருப்பாவை, திருவெம்பாவை, திருப்புகழ், திருமுருகாற்றுப்படை, திருமுறை, திருமுறை கண்ட புராணம், திருவருட்பா, திருவள்ளுவமாலை, திருவாசகம், திருவாய்மொழி, திருவிசைப்பா, திருவிளையாடற் புராணம், திருவந்தாதி, திருச்சந்த விருத்தம், திருவிருத்தம், திருமொழி, திருமாலை, திருப்பள்ளி எழுச்சி, திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம், திருவெழு கூற்றிருக்கை, திருமடல் முதலிய கவிதை இலக்கியங்கள் தெய்விக மணங்கமழும் திருப்பாடல்களாக விளங்குகின்றன.

இராமன் கதை வெறுங் கதையன்று; திருக்கதை. இதைக் கீழ்க் காணும் பாடல் சுவையுடன் அறிவிக்கின்றது.

''இம்பர் நாட்டில் செல்வமெல்லாம் எய்தி அரசாண்
டிருந்தாலும்
உம்பர் நாட்டில் கற்பகக்கா ஓங்கு நீழல்இருந்தாலும்
செம்பொன் மேரு அணையபுயத் திறல்சேர் இராமன்
திருக்கதையில்

கம்பநாடன் கவிதையிற்போற் கற்றோர்க்கு இதயம்
கனியாதே''

திருவாசகத்தில் திருவம்மானை, திருப்பொற்சுண்ணம், திருக்கோத்தும்பி, திருத்தெள்ளேணம், திருச்சாழல், திருப்பூவல்லி, திருவுந்தியார், திருத்தோணோக்கம், திருப்பொன்னூசல் முதலியன இசைத்துறையைச் சேர்ந்த திருப்பாடல்களாகும்.

**வாழும் கவிதை:**

தனிக் கவிதைக்கு ஒரு குறிக்கோள் வேண்டும் என்ற அவசியம் இல்லை. ஆனால் காப்பியமாகத் திகழும் தொடர் கவிதைக்கு ஓர் உயர்ந்த குறிக்கோள் இருப்பது இன்றியமையாதது. காட்டாக,

''அரைசியல் பிழைத்தோர்க்கு அறம்கூற் றாவதூஉம்
உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தலும்,
ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும் என்பதூஉம்
சூழ்வினைச் சிலம்பு காரணமாகச்
சிலப்பதி காரம் என்னும் பெயரால்
நாட்டுதும் யாமோர் பாட்டுடைச் செய்யுள்''

என்னும் மூன்று குறிக்கோளைக் கொண்டு விளங்குகின்றது சிலப்பதிகாரம். இக்குறிக்கோளைக் கொண்டு சிலப்பதிகாரத்தில் ஆங்காங்கே வெளிப்படையாக வலியுறுத்தப்படவில்லை. ஆனால், அவற்றைக் கற்போர் அக்குறிக்கோளைத் தாமாகவே உணரும் வகையில் இங்கு நோக்கத்தக்கது. ''அறம் பொருள் இன்பம் வீடு அடைதல் நூற்பயனே'' என்பது நம் முன்னோர் கருத்து. இத்தகைய குறிக்கோளையுடையவை நிலைத்து வாழும்.

நாடகத்திலோ திரைப்படத்திலோ வரும் எல்லாக் காட்சிகளும் சிறப்பாக இருந்தாலும் அவற்றில் சில காட்சிகளே காண்போர் உள்ளத்தில் நிலைத்த இடம் பெறுகின்றன அக் காட்சிகள் நெஞ்சிருக்கும் வரை நினைவிலிருக்கும். இவ்வுண்மை கவிதையுலகத்திற்கும் பொருந்தும். நாம் பல கவிதைகளைப் படித்திருக்கின்றோம். எல்லாம் நம் நினைவில் இருப்பதில்லை. நினைவிலிருக்கும் கவிதைகளிலும் சில அரைகுறையாகத்தானிருக்கின்றன. ஆனால், சில கவிதை அடிகள் எல்லாருடைய நெஞ்சத்திலும் நிலைத்து விட்டன.

''யாதும் ஊரே யாவரும் கேளிர்''

புறநானூறு

''பண்பெனப் படுவது பாடறிந்து ஒழுகுதல்''
[கலித்தொகை]

''ஒன்றே குலனும் ஒருவனே தேவனும்''
[திருமந்திரம்]

''தோள் கண்டார் தோளே கண்டார்''
[கம்பராமாயணம்]

''இருந்தமிழே உன்னால் இருந்தேன்''
[தமிழ்விடு தூது]

''என்கடன் பணிசெய்து கிடப்பதே''
[அப்பர் தேவாரம்]

''செந்தமிழ் நாடெனும் போதினிலே—இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே''
[பாரதியார்]

மேற்கூறிய கவிதையடிகள் தமிழ் கற்றவர் உள்ளத்தில் நிலையான இடம்பெற்று என்றும் வாழ்ந்துகொண்டே இருக்கின்றன. ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தோன்றிய சங்க இலக்கியம் கால வெள்ளத்தை வென்று வாழும் கவிதையாய் விளங்குகின்றது. ஆனால், சென்ற ஆண்டு வெளிவந்த திரைப்படப் பாடல் இன்று இறந்து விட்டது. ஏன்? சங்க காலக் கவிதையில் ''உயிர்'' இருக்கின்றது; ஆனால் திரைப்படப் பாடல்கள் சிலவற்றைத் தவிர மற்றவை உயிரற்ற உணர்ச்சியற்ற வெறும் டப்பாப் பாடல்கள் புற்றீசல்போல மிகுதியாகத் தோன்றி உடனே மறைகின்றன. ஆனால், வாழும் கவிதைகளோ எண்ணிக்கையில் குறைவாகத் தோன்றினாலும் என்றும் நிலைத்து உயிருடன் வாழ்கின்றன. டப்பாப் பாட்டுக்களைப் பன்றிக் குட்டிகளுக்கும் புற்றீசலுக்கும், வாழும் கவிதைகளைச் சிங்கக் குட்டிக்கும் யானைக் கன்றுக்கும் ஒப்பிடலாம்

**கவிதை இலக்கணம்:**

'கவிதை என்றால் என்ன?' சில சொற்களில் வரையறுத்துக் கூறுவது மிகவும் கடினம். நல்ல கவிதையில் சில சிறப்பியல்புகள் அமைந்திருத்தல் வேண்டும் என்று நாம் நினைக்கின்றோம்; எதிர்பார்க்கின்றோம். கவிதையை மலருக்கு ஒப்பிடலாம். மலரின் அழகு, மென்மை, அமைப்பு, வண்ணம், மணம் ஆகிய எல்லாம் சேர்ந்து காண்போர் மனத்தை மகிழ்விக்கின்றன. அதைப்போலவே கவிதையின் சிறப்பியல்புகள் எல்லாம் ஒன்றாகச் சேர்ந்து கற்போர்க்குக் கலையின்பம் அளிக்கின்றன. வளமான கற்பனை, பொருத்தமான சொற்கள், தெளிவான நடை, சந்த இன்பம், உணர்ச்சிப் பெருக்கு, எடுப்பான உவமை,

எதுகை, மோனை, ஆழ்ந்த கருத்து, கலைச்சுவை, இலக்கிய நயம் இவையெல்லாம் சேர்ந்து கவிதைக்கு அழகும் பொலிவும் ஊட்டுகின்றன. கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பர்,

''புவியினுக் கணியாய் ஆன்ற பொருள் தந்து புலத்திற்றாகி
அவிபகத் துறைகள் தாங்கி ஐந்திணை நெறிய ளாவிச்
சவியுறத் தெளித்து தண்ணென் றொழுக்கமும் படிந்து சான்றோர்
கவியெனக் கிடந்த கோதா விரியினை வீரர் கண்டார்''

என்று கவிதைக்குச் சிறந்த நல்லிலக்கணம் வகுத்துள்ளார்.

கவிச்சுவையும் உணர்ச்சியும் பொருந்திய இலக்கியங்களே அன்றாட வாழ்க்கைக்குத் தேவை. ''எல்லாரிடத்திலும் கவிதையின் கூறு உண்டு. முற்றிலும் கவிதையின் கூறாக உள்ளவர் எவரும் இலர். கவிதையைச் சரியாகப் படிக்கக் கூடியவர் அனைவரும் கவிஞர்களே'' என்று கார்லைல் கூறுகின்றார்.

வரலாறு மனிதனுடைய சாதனையைக் கூறுகின்றது; மெய்ப்பொருளியல் மனிதனுடைய சிந்தனையை உரைக்கின்றது; சமயம் மனிதனுடைய நம்பிக்கையைக் காட்டுகின்றது; கவிதை மனிதனுடைய உணர்ச்சியைப் புலப்படுத்துகின்றது. கவிஞனுடைய உள்ளத்தில் தோன்றிய உணர்ச்சி இசையோடு வெளிப்பட்டுக் கேட்பார் தம்மை இசையச் செய்யும்போது கவிதையாகின்றது. உணர்ச்சி (Emotion), கற்பனை (Imagention), வடிவம் (Form), கருத்து (Content) ஆகிய நான்கும் கவிதையின் இன்றியமையாத பண்புகள் என்று வின்செச்டர் கவிதைக்கு இலக்கணம் வகுத்துள்ளார்.

கவிதையைப் பற்றிய ஐ. ஏ. இரிச்சர்ட்சு (I. A. Richards), ஏ. சி. பிராட்லி (A. C. Bradley), எல். எபர் கொராம்பி (L Abercorambie), அட்சன் (W H. Hudson), அர்னால்டு (M. Arnold), வீன்செச்டர் (W. T Vinchester) போன்ற அயல்நாட்டுப் பேரறிஞர் கருத்துக்களையும் தமிழ் நாட்டறிஞர் கருத்துக்களையும் ஒப்பிட்டு ஆராய்ந்தால் அவை அடிப்படையில் ஒன்றுபடுகின்றன என்பதைத் தெளிவாக அறியலாம்.

**கவிதையைப் பற்றிய**
**கவிதையும் அறிமுகக் கவிதையும்:**

முன்னோர் கவிதைகளை முறையாகப் படித்துச் சுவைத்து மகிழ்ந்த கவிஞர்களாகிய சுவைஞர்கள் தாம் சுவைத்த கவிதைகளில்

அமைந்துள்ள கவிச்சுவையைப் பிறரும் அறியும் வகையில் இனிய கவிதைகளில் யாத்துள்ளனர்.

''மட்டாரும் தென்களந்தைப் படிக்காசன்
உரைத்ததமிழ் வரைந்த ஏட்டைப்
பட்டாலே சூழ்ந்தாலும் மூவுலகும் பரிமளிக்கும்
பரிந்துஅவ் வேட்டைத்
தொட்டாலும் கைம்மணக்கும் சொன்னாலும்
வாய்மணக்கும் துய்ய சேற்றில்
நட்டாலும் தமிழ்ப்பயிராய் விளைந்திடுமே
பாட்டின் உறுநளினம் தானே''

என்று படிக்காசுப் புலவரின் கவிதை நயத்தையும் மணத்தையும் இனிது பாராட்டிப் பாடுகின்றார் பலபட்டடைச் சொக்கநாதப் புலவர்.

பாரதியார் கவிதைகளில் பெரிதும் ஈடுபாடுள்ள ஒரு கவிஞர்

''பட்டொளி மாமதிப் பெருநிலவே!—எங்கள்
பாரதித் தீங்கவி கேட்டிருப்பாய்!—அதில்
சொட்டிடும் இன்பம்போல் சுவையுளதோ!—அல்லி
சொரிந்திடும் முத்தத்தின் போதையிலே!''

என்று பாடியுள்ளார்.

''தேசிக விநாயகத்தின் கவிப்பெருமை
தினமும் கேட்பதுஎன் செவிப்பெருமை''

என்று கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையின் கவிச்சுவையை இனிது பாடிய நாமக்கல் கவிஞர், கவிமணியின் வடிவத்தையும் நயம்படப் பாடுகின்றார்.

''துரும்பென மெலிந்த தேகம்,
துலங்கிடும் குளிர்ந்த பார்வை,
இரும்பினும் வலிய உள்ளம்,
இனியவே செய்யும் எண்ணம்,
பரம்பொருள் நினைவே காட்டும்,
பாரெலாம் பரந்த நோக்கம்,
கரும்பினும் இனிய சொற்கள்,
கவிமணி வடிவ மாகும்.''

கவிகளைப் பற்றியும் கவிஞர்களைப் பற்றியும் தமிழ் மொழியில் சாற்றுக் கவிகள் பல்கியிருக்கின்றன என்பது தேற்றம்.

ஒருத்தி பல குழந்தைகளைப் பெறுகின்றாள். ஆனால் பொதுவாக எல்லாக் குழந்தைகளும் நல்லவர்களாகச் சான்றோர்களாக ஆவதில்லை. இவ்வுண்மை கவிஞனுக்கும் பொருந்தும்; கவிஞன் தான் அறியாமலே ஒருசில கவிதைகளை உயர்ந்த கவிதைகளாக அமைப்பது அவனை உலகுக்கு அறிமுகப்படுத்தி வைக்கின்றன. பாரதியார் விருப்பத்திற்கேற்பப் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பாடிய பாட்டு அவரைத் தமிழ் உலகிற்கு அறிமுகப்படுத்தியது. அத்தகு சிறப்பமைந்த அந்தப் பாடல் இதுதான்:

''எங்கெங்கும் காணினும் சக்தியடா!—தம்பி
ஏழுகடல் அவள் வண்ணமடா! — அங்குத்
தங்கும் வெளியினிற் கோடியண்டம் — அந்தத்
தாயின்கைப் பந்தென ஓடுமடா! — ஒரு
கங்குலில் ஏழு முகிலினமும் — வந்து
கர்ச்சனை செய்வது கண்டதுண்டோ — எனில்
மங்கை நகைத்த ஒலியெனலாம் — அவள்
மந்த நகையங்கு மின்னுதடா!''

''காளை ஒருவன் கவிச்சுவையைக் — கரை
காண நினைத்த முழு நினைப்பில் — அன்னை
தோளசைத் தங்கு நடம் புரிவாள் — அவன்
தொல்லறிவாளர் திறம் பெறுவான் — ஒரு
வாளைச் சுழற்றும் விசையினிலே — அந்த
வைய முழுவதும் துண்டு செய்வேன் — என
நீள இடையினின்றி நீ நினைத்தால் — அம்மை
நேர்படுவாள் உன்றன் தோளினிலே!''

காந்தியக் கவிஞராகிய நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை அவர்கள் பல சிறந்த கவிதைகளை இயற்றியுள்ளார். ''கத்தியின்றி இரத்தமின்றி யுத்தமொன்று வருகுது'' என்னும் கவிதையால் அவர் தமிழுலகத்திற்கு அறிமுகமானார். இவ்வாறு கவிஞனை வரலாற்றில் அவன் படைத்த கவிதைகளில் ஏதாவதொன்று அறிமுகக் கவிதையாய் அமைந்து விடுகின்றது.

**கவிஞரும் புலவரும்:**

தமிழ்க் கவிஞர்கள் பலரும் வறுமையில் உழன்றார்கள் என்று தமிழ் இலக்கிய வரலாறு தெளிவாகக் காட்டுகின்றது. தமிழ்க் கவிஞர்களின் வறுமைத் துயரைப் போக்கவும் அவர்களுக்கு நல்வாழ்வு அளிக்கவும் புரவலர்கள் அவ்வப்போது தமிழகத்தில் தோன்றினார்கள். புரவலரின் அருளையும் பொருளையும் பெற்ற பாவ

லர்கள் தம் ஆழ்ந்த நன்றியுணர்வை அவ்வப்போது தங்கள் கவிதைகளில் புலப்படுத்தினார்கள். அப்பாடல்கள் புரவலரின் பெயர்களை இவ்வுலகத்தில் என்றும் நிலைத்திருக்கச் செய்து விட்டன. கம்பரை ஆதரித்த புரவலர் சடையப்ப வள்ளல் கம்பர் தாம் இயற்றிய இராமாயணத்தில் ஆயிரம் பாட்டிற்கு ஒரு பாடல் வீதம் சடையப்பரைப் புகழ்ந்து பாராட்டியிருக்கிறார். அவற்றுள் இஃது ஒரு பாடல்:

''விண்ணவர் போய பின்றை விரிந்தபூ மழையி னாலே
தண்ணறுங் கான நீங்கித் தாங்கருந் தவத்தின் மிக்கோன்
மண்ணவர் வறுமை நோய்க்கு மருந்தன சடையன் [வெண்ணெய்
அண்ணறன் சொல்லே என்னப் படைக்கலம் அருளினானே''

வக்கபாகையை ஆண்ட கொங்கர்குல மன்னனான வரபதியாட் கொண்டான் வில்லிப்புத்தூராழ்வாரைப் பாரதம் பாடுமாறு விரும்பி வேண்டினான்; ஆதரித்தான். அவ்வள்ளலை வில்லிப் புத்தூரார் புகழ்ந்து பாடியுள்ளார். அப்பாடலை இங்குக் காணலாம்.

''கோவல்சூழ் பெண்ணை நாடன் கொங்கர்கோன் [பாகைவேந்தன்
பாவலர் மானங் காத்தான் பங்கயச் செங்கை யென்ன
மேவலர் எமரென் னாமல் வெங்களந் தன்னின்ற
காவலன் கன்னன் கையும் பொழிந்தது கனகமாரி''

தமிழ்ப் பாவலர்களைப் பெரிதும் ஆதரித்த புரவலர்களில் வள்ளல் சீதாக்காதி மிகவும் குறிப்பிடத்தக்கவர். ஒரு தட்டில் பொன்னும் ஒரு தட்டில் நெல்லும் ஒக்க விற்ற கார் தட்டிய பஞ்ச காலத் திலும் அன்னதானம் புரியச் சிறிதும் தயங்காமல் மார் தட்டிக் கொண்டு முன் வந்தவர் சீதாக்காதி வள்ளல். அத்தகைய பெருவள்ளல் இயற்கை எய்திய பின்னர்ப் பாடப்பெற்ற இரங் கற்பா தமிழ் இலக்கிய வரலாற்றில் என்றும் நிலைபெற்று வாழ் கின்றது.

''பூமா திருந்தென் புவிமா திருந்தென் பூதலத்தில்
நாமா திருந்தென்ன நாமிருத் தென்னநன் னாவலர்க்குக்
கோமா னழகமர் மால்சீதக் காதிகொடை மிகுந்த
சீமான் இறந்திட்ட போதே புலமையும் செத்ததுவே''

இவ்வாறு தமிழ்ப் பாவலர்கள் தம்மை ஆதரித்துப் போற்றிய புரவலர்களைத் தம் பாடல்களில் என்றும் வாழுமாறு செய்து விட்டனர்.

**கவிதை அனுபவம்:**

ஓர் அருமையான மாம்பழம் இருக்கிறது. ஒருவன் அம்மாம்பழத்தின் தோற்றம், வளர்ச்சி, மாற்றம், முதிர்ச்சி முதலிய தாவர ஆராய்ச்சியில் ஈடுபடுகின்றான். வேறொருவன் அம்மாம் பழத்தை எப்படித் தோட்டத்தில் பயிராக்குவது என்று தோட்டக் கலை ஆராய்ச்சியில் ஈடுபடுகிறான்.

இன்னொருவன் அம்மாம்பழத்தின் நீளம், அகலம், சுற்றளவு, பரப்பளவு, கன அளவு, எடை, தோல்கனம், விதை அளவு, விதைக்கும் பழத்தின் மேற்பரப்பிற்கு உள்ள இடைவெளி அளவு ஆகியவை பற்றிக் கணக்கு அடிப்படையில் ஆராய்ச்சி செய்கிறான்.

மற்றுமொருவன் அம்மாம்பழத்தின் சென்ற ஆண்டின் விலை, இன்றைய விலை, இரண்டிற்குமுள்ள வேறுபாடு, இன்றைய விலையேற்றத்திற்குக் காரணம், அயல் நாடுகளில் மாம்பழத்தின் விலை, உலகச் சந்தையில் மாம்பழத்திற்குரிய இடம் ஆகியவை குறித்துப் பொருளாதார ஆராய்ச்சி செய்கின்றான். வேறொருவன் உலகத்தில் எங்கெங்கு மாம்பழங்கள் மிகுதியாக விளைகின்றன, எந்தெந்த நாடுகள் மாம்பழங்களை இறக்குமதி செய்கின்றன என்று மாம்பழத்தைப் பற்றி வணிக ஆராய்ச்சி செய்கிறான்.

மாம்பழ வளர்ச்சிக்குரிய தட்பவெப்ப நிலைகளை ஆராய்கின்றான் நிலவியல் அறிஞன்.

இன்னொருவன் தமிழ் மொழியிலுள்ள மாங்காய் என்னும் சொல் மாங்கோ ( Mango ) என்னும் வடிவத்தில் காட்சியளிப்பதைக் கண்டு இரு மொழிகளையும் ஒப்பிட்டுச் சொல்லாராய்ச்சி செய் கிறான்.

வேறொருவன் மாம்பழம் 'பகுபதமா', 'பகாப்பதமா' என்று இலக்கண ஆராய்ச்சி செய்கின்றான். பிறிதொருவன் மாம்பழம் என்னும் சொல்லிலுள்ள சிறப்பு ழகரத்தை எப்படி ஒலிப்பது என்று ஒலியியல் ( Phonetics ) ஆராய்ச்சியில் ஈடுபடுகின்றான். இலக்கணத்திலுள்ள புணர்ச்சி விதிகளில் ஈடுபாடு கொண்டவன் மா + பழம் ஆகிய இரு சொற்களும் புணர்ந்து தோன்றல் விகாரத்துடன் மாம்பழம் என்றான தன்மையை ஆராய்கிறான்.

இன்னொருவன் மாம்பழம் முந்தையதா மாமரம் முந்தையதா என்று தர்க்க ஆராய்ச்சி செய்கிறான்.

வேறொருவன் மாம்பழம் என்னும் சொல்லை எந்தெந்தக் கவிஞர்கள் எவ்வெவ்வாறு கையாண்டுள்ளனர் என்று இலக்கிய ஆராய்ச்சி செய்கின்றான்.

மற்றுமொருவன் மாம்பழத்தைக் குழந்தைகள் கன்னத்திற்கு ஒப்பிடலாமா, காதலியின் கன்னத்திற்கு ஒப்பிடலாமா என்று உவமையியல் ஆராய்ச்சியில் மூழ்கி விடுகிறான்.

பிறிதொருவன், 'இறைவன் ஏன் மாம்பழத்தைப் படைத்தான்?' என்னும் வினாவைத் தனக்குள்ளே எழுப்பிக் கொண்டு, மெய்ப்பொருள் (தத்துவம்) ஆராய்ச்சியில் புகுகின்றான்.

நீதி நூலறிஞன் ஒருவன் மாம்பழம் உணர்த்துகின்ற நீதியை ஆராய்ந்து அதைக் கற்பனை நயம்பட மக்களுக்கு உணர்த்த முயல்கின்றான்.

வேறொருவன் முக்கனியில் மாம்பழம் இடம் பெற்றதை எண்ணி அதற்குரிய காரணத்தை ஆராயத் தொடங்குகின்றான்; ஓர் ஓவியன் மாம்பழத்தின் உருவத்தை எட்டில் அழகுபட வரைந்து அதைக் கண்டு இன்பம் அடைகிறான்.

ஒரு கைவினைஞன் மாம்பழத்தினைக் கூர்ந்து நோக்கி அம்மாம்பழத்தைப் போல மண்ணினால் செயற்கை மாம்பழம் செய்து வண்ணம் பூசி இயற்கை மாம்பழமும் செயற்கை மாம்பழமும் தோற்றத்தால் முற்றிலும் ஒத்திருப்பதைக் கண்டு பெரிதும் அகம் மகிழ்கின்றான்.

மாம்பழத்தைத் தனியாகவோ ஏனைய மூலிகையுடனோ மருந்தாக ஆக்க முடியுமா என்று ஆராய்ச்சி செய்கின்றான் மருத்துவ நிபுணன்.

இவைபோன்ற மாம்பழத்தைப் பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபடாமல் அப்பழத்தை ஒருவன் சுவைத்துச் சுவைத்து சாப்பிடுகின்றான். அவனே உண்மையில் மாம்பழத்தின் பயனை உணர்ந்தவன். மாம்பழத்தினை ஆராய்ந்தவர் எல்லாரும் 'அறிவு' நிலையிலிருந்து ஆராய்ந்தனர்; ஆனால், மாம்பழத்தைச் சுவைத்தவன் 'உணர்வு' நிலையிலிருந்து அனுபவித்தான். மாம்பழம் சுவைத்து உண்ணப் படுவதற்காகவே படைக்கப்பட்டதேயன்றி அறிவு நிலையிலிருந்து கொண்டு ஆராய்ச்சி செய்வதற்காக அன்று. மாம்பழத்தைக் குறித்து ஆராய்ந்தவர்கள் மாம்பழம் பற்றி

அறிந்தார்கள். மாம்பழத்தை உண்டவன் அதன் சுவையை உணர்ந்தான். இவ்வுண்மை, கவிதைக்கும் முற்றிலும் பொருந்தும்.

யாப்பாராய்ச்சி செய்வதற்காகக் கவிதை படைக்கப்படுவதில்லை. கவிச்சுவையை உணர்ந்து அனுபவிப்பதே கற்றோரின் தலையாய கடமையாகும். எனவேதான் கவிதை 'செவி நுகர்கனி' என்று குறிக்கப்படுகின்றது. திருவாசகத் தேனைச் சுவைத்து இனிமையையும் உள்ளத்தை யுருக்கும் பாங்கினையும் தெய்விக ஆற்றலையும் இனிது இயம்புகின்றார்.

''கவிதை என்பது சொற்களாலாகிய இசை'' என்று ஃபுல்லர் என்னும் அறிஞர் கூறுகின்றார்.

''Poetry is music in words'' —Fuller.

''கவிதையின் கடமை, நம்மை உண்மையாக உணரவைத்தல் வேண்டும்; சரியாகச் சிந்திக்க வைப்பதன்று'' என்று இராபர்ட்சன் என்னும் அறிஞர் கருதுகின்றார்.

''The office of Poetry is not to make us think accurately. but feel trully.'' —F. W. Robertson.

''கருத்திசையை மொழியிசையால் உரைக்கவல்லது கவிதை'' என்பது சாட்ஃபீல்டு என்னும் அறிஞரின் கூற்று.

''Poetry is music of thought conveyed to us in the music of language'' —Chartfield.

''மிகத் திறமையாக இயற்றப் பெற்ற கவிதை மிகவும் சிறந்ததாகிவிடாது; கவிதையம்சம் மிகுதியாக இருந்தால்தான் சிறந்த கவிதையாகும்'' என்பது செகெப்பர் என்னும் அறிஞரின் கருத்து.

''The greatist poem is not that which is most skilfully constructed, but that in which there is the most poetry'' —L. Schefer.

''உன்னிடம் கொஞ்சமாவது கவிதையில்லாவிட்டால் கவிதையை வேறு எங்கும் பார்க்க முடியாது'' என்று சோபர்ட்டு என்னும் அறிஞர் கவிதையைப் பற்றிய தம் கருத்தைக் கூறுகின்றார்.

"You will find poetry nowhere unless you bring some with you." —Joubert.

"உண்மை, கவிதை வடிவத்தில் இருக்கும்போது அது மேலும் ஒளி வீசுகின்றது" என்று போப் கூறுகின்றார்.

"Truth shines the brighter clad in verse" —Pope.

"துயரத்தின் தங்கை கவிதை; துன்புற்றுக் கண்ணீர் வடிக்கும் ஒவ்வொரு மனிதனும் கவிஞனே. ஒவ்வொரு கண்ணீர்த் துளியும் சிறு கவிதையாகும்; ஒவ்வொரு இதயமும் கவிதையே" என்று தம் கருத்தை உரைக்கின்றார் ஆண்ட்ரே என்னும் அறிஞர்.

"Poetry is the sister of sorrow; every man that suffers and weeps is a poet; every tear is a verse, and every heart a poem" —Andre

"உள்ளத்தின் ஆழத்திலிருந்தும் உள்ளத்தில் தோய்ந்து வெளிப்படும் உண்மையே கவிதையாகும்" என்று கவிதையைப் பற்றிக் கூறுகின்றார் சாப்பின் என்னும் அறிஞர்.

"Poetry is the utterance of deep and heart feet truth" —E H. Chapin

"வானம்பாடிகள் மின்மினிப் பூச்சிகளை உண்டு வாழ்வதைப் போல் கவிஞர்கள் இயற்கை ஒளியிலும் இயற்கை அழகிலும் வாழ்கின்றார்கள்" என்பது பெயிலி என்னும் அறிஞரின் கூற்று.

"Nightlingale feed on glow—worms, so poets live ....... living light of nature and beauty" —Bailey

"கவிதை என்பதே உணர்ச்சி பூசப்பெற்ற ... ... ... ... ... தன்மை" என்று கவிதையைப் பற்றிய தம் கருத்தைக் கூறுகின்றார் வில்சன் என்னும் அறிஞர்.

"Poetry is the intellect coloured by feeling" —Prof Wilson

"ஒருவன் தன் வாழ்நாளில் ஓர் அடிக் கவிதைகூட இயற்றா விட்டாலும், அவன் கவிச்சுவையில் உயர்ந்த இன்பம் அடைந்தால் அவன் உண்மையான கவிஞனே" என்பது மேட். துடெவெண்ட் என்பவர் கூற்று.

"He who finds elevated and loftly pleasure in the feelings of Poetry is a true Poet. though he never composed a line of verse in his entire life time"
—Mad. Dudevant.

"எல்லா நாடுகளிலுமுள்ள தலையாய கவிஞர்களிடம் காணப் படும் சிறப்பியல்புகள் அந்தந்த நாடுகளுக்கு உரியவையல்ல. உலகத்திற்கு உரியவை" என்று இலாங்பெலோ கூறு கின்றார்.

"All that is best in the great poets of all countries. is not what is national in them, but what is universal." —Longfellow.

"வரலாற்றை விட உண்மையே கவிதைக்கு அருகில் இருக் கின்றது" என்பது பிளேட்டோ கருத்து.

"Poetry comes nearer to vital truth than history"
—Plato.

"ஒருவன் தன் வாழ்வில் ஒரு முறையேனும் கவிஞனாய் இராத வன் துர்ப்பேறாளனே" என்பது இலாமர்ட்டைன் கருத்து.

"Sad is his lot, who, once atleast in his life, has been a poet. —Lamartine.

"ஏட்டுக் கவிதை பேசும் கவிதையாகும்; சிலை, ஓவியம், இசை, ஆகியவை நடிக்கும் கவிதைகள்" ஆகும் என்பது இரச்கின் கூற்றாகும்.

"The written poem is only poetry talking, and the statue; the picture and the musical composition are poetry acting" —Ruskin

"பேரின்பம் கலந்த சிறந்த மன நிகழ்ச்சியின் பதிலே கவிதை யாகும்" என்பது செல்லியின் கூற்று.

"Poetry is the record of the happiest and best minds."
– Shelly.

"இறைவன் மக்கள் அனைவரின் ஆன்மாக்களையும் உண்மையும் அழகுமாய் அமைத்திருக்கின்றான். அவற்றைத் தொடர்ந்து வெளிப்படுத்துவதன் வாயிலாக நம்மை மிகச் சிறந்த

அறிஞர்களாகவும் நல்லவர்களாகவும் ஆக்குகின்றது கவிதை'' என்பது சே. ஆர். இலோவல் கருத்து.

''Poetry is something to make us wiser and better. by continually revealing those types of beauty and truth which God has set in all men's souls.''
—J. R. Lowell

''ஆசையில் பிறந்த கவிதை எப்போதும் மனத்தைக் கெடுக்கும். மனநிறைவில் பிறந்த கவிதை எப்போதும் உள்ளத்தை உயர்த்தும்'' என்று ஆப்கின்சு மொழிகின்றார்.

''Poetry begotten of passion is ever debasing; poetry born of real heartfulness, always ennobles and uplifts.'' —A. A. Hopkins.

கவிதையின் சிறப்பை வால்டேர் பின்வருமாறு கூறுகின்றார்: ''உரைநடையைவிட கவிதை சில சொற்களால் பல கருத்துக்களை உரைக்கவல்லது. கவிதைக்குரிய இச்சிறப்பை யாரும் மறுக்க முடியாது''

''One merit of poetry few person will deny; it says more, and in fewer words, than prose.'' —Voltaire

''அறிவு சான்ற இலக்கியச் சமுதாயத்தில் பெருங்கவிஞனாக விளங்க விரும்புகின்றவன் முதன் முதலில் சிறு குழந்தையாக இருத்தல் வேண்டும்'' என்பது மெக்காலே கூற்று.

''He who in an enlightened and literary society aspires to he a great poet. must first become a little child''
—Macaulay.

கவிதையின் பல்வேறு உண்மைகளையும் கருத்துக்களையும் பல கோணங்களில் இருந்து கண்டோம். கவிதை விருந்தைச் சுவைக்க வேண்டிய முறையில் சுவைத்துக் கவிதைப் பயனை அடைந்து மக்கள் இன்பம் நுகர்வார்களாக.

——— :(o): ———

# மொழி
# முதனிலை இறுதிநிலை
# எழுத்துக்கள்*

**பாவலரேறு ச. பாலசுந்தரம்**
துணை முதல்வர்
கரந்தைப் புலவர் கல்லூரி.

## [2]

மற்றுஞ் சகரபகரங்கள் மேல் ஏறி இறுதியாக வருவனவற்றுள் திரிபின்றி முற்றுகரமாக வழங்கும் சொற்கள் மூன்றே உள்ளமை நோக்கி அவற்றை விதந்தோதினார். ஏனைய தொடர்மொழி யிறுதிக்கண் வல்லெழுத்து ஊர்ந்து குற்றியலுகரமும் வரலாம் முற்றுகரமும் வரலாம் என்பது ஆசிரியர் கருத்தென்பதை ஓராமல் இம்மூன்று சொற்களைத் தவிர ஏனையவெல்லாம் குற்றுகரமே எனத் திரியக் கொள்வார் இரெட்டியார் அவர்கள்.

இவ்வாறே கதவு களவு கனவு புதவு முதலிய விதியீற்றுச் சொற்களை இயல்பீறாகக் கருதி

''உ ஊகாரம் நவவொடு நவிலா''

என்னும் நூற்பாவை நிரல்நிரையாக்கிப் பொருள்கூற விழைவார் சிலர். இவை யாவும் ஆசிரியர் கருத்திற்கும் தமிழ் மொழி யமைப்பிற்கும் பொருந்தா என்பதை எனது சார்பெழுத் தாராய்ச்சிக் கட்டுரையில் விளக்கமாகக் காணலாம்.

இனி இங்ஙனம் மொழி முதனிலையாகும் எழுத்துக்கள் தொண்ணூற்று நான்கு என்றும் இறுதிநிலையாகும் எழுத்துக்கள் நூற்றெழுபத்து மூன்று என்றும் விரித்துக்கூறப் பெற்றனவாயினும் இவற்றை முதலும் ஈறுமாக உடைய சொற்கள் தம்முள் புணருங்கால் அவை உயிர்முதல் உயிரீறு மெய்ம்முதல் மெய்யீறு என இரண்டே வகையில் அடங்குதலின் ஆசிரியர்

---

*துணர் 55 மலர் 4-இன் தொடர் கட்டுரை.

# 2. மொழி
## இறுதி எழுத்துக்கள்.

| | அ | ஆ | இ | ஈ | உ | ஊ | எ | ஏ | ஐ | ஒ | ஓ | × | 11 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| × | க | கா | கி | கீ | கு | கூ | × | கே | கை | × | கோ | கௌ | 10 |
| × | × | × | × | × | × | × | × | × | × | × | × | × | × |
| × | ச | சா | சி | சீ | சு | சூ | × | சே | சை | × | சோ | × | 9 |
| ஞ் | ஞ | ஞா | ஞி | ஞீ | ஞு | ஞூ | × | × | ஞை | × | × | × | 7 |
| × | ட | டா | டி | டீ | டு | டூ | × | டே | டை | × | டோ | × | 9 |
| ண் | ண | ணா | ணி | ணீ | ணு | ணூ | × | ணே | ணை | × | ணோ | × | 9 |
| × | த | தா | தி | தீ | து | தூ | × | தே | தை | × | தோ | × | 9 |
| ந் | ந | நா | நி | நீ | × | × | × | நே | நை | நொ | நோ | × | 8 |
| × | ப | பா | பி | பீ | பு | பூ | × | பே | பை | × | போ | × | 9 |
| ம் | ம | மா | மி | மீ | மு | மூ | × | மே | மை | × | மோ | × | 9 |
| ய் | ய | யா | யி | யீ | யு | யூ | × | யே | யை | × | யோ | × | 9 |
| ர் | ர | ரா | ரி | ரீ | ரு | ரூ | × | ரே | ரை | × | ரோ | × | 9 |
| ல் | ல | லா | லி | லீ | லு | லூ | × | லே | லை | × | லோ | × | 9 |
| வ் | வ | வா | வி | வீ | × | × | × | வே | வை | × | வோ | வௌ | 8 |
| ழ் | ழ | ழா | ழி | ழீ | ழு | ழூ | × | ழே | ழை | × | ழோ | × | 9 |
| ள் | ள | ளா | ளி | ளீ | ளு | ளூ | × | ளே | ளை | × | ளோ | × | 9 |
| × | ற | றா | றி | றீ | று | றூ | × | றே | றை | × | றோ | × | 9 |
| ன் | ன | னா | னி | னீ | னு | னூ | × | னே | னை | × | னோ | × | 9 |
| ⋎ | குற்றியலுகரம் | | | | | | | | | | | | 1 |
| ⋏ | மெய் | | | | | | | | | | | | 11 |
| | | | | | | | | | | | | ஆக | 174 |

''மூன்றுதலை யிட்ட முப்பதிற் றெழுத்தின்
இரண்டுதலை யிட்ட முதலா கிருபஃது
அறுநான் கீற்றொடு நெறிநின் றியலும்
எல்லா மொழிக்கும் இறுதியும் முதலும்
மெய்யே உயிரென் றாயீ ரியல'' (புணரியல்: 1)

என்றும்,

''அவற்றுள்,
மெய்யீ றெல்லாம் புள்ளியொடு நிலையல்'' (புண: 2)

''குற்றிய லுகரமும் அற்றென மொழிப'' (புண: 3)

''உயிர்மெய் யீறும் உயிரீற் றியற்றே'' (புண: 4)

என்றும் வகுத்தோதினார்.

இவற்றுள் 'இரண்டுதலை யிட்ட முதலா கிருபஃது' என்பவை உயிர் 12, உயிர் (ஊர்ந்த) மெய் 9, குற்றியலுகரம் 1. ஏனையவை விலக்கப்பட்டன. இவ்வாறு இவை விலக்குண்டதன் காரணத்தை இனிக் காண்போம்.

அறிவும் முயற்சியும் சான்ற மக்கள் உலகிலுள்ள பல்வேறுபட்ட பறவைகள் — விலங்குகள் — வாச்சியங்களைப்போல ஒலிக்கவும் பல்வேறுபட்ட மொழிகளைப் பயின்று அவ்வெழுத்தொலிகளைச் செம்மையாகப் பலுக்கவும் ஆற்றல் சான்றவர்கள். அவ்வாறிருக்கத் தமிழியல் நூலார் சில எழுத்தொலிகளை முதலிலும் ஈற்றிலும் வாராவென விலக்கியதற்குக் காரணம் அவற்றைப் பலுக்க இயலாதென்று விலக்கியதாகத் தோன்றவில்லை. அன்றி அவை பிறமொழிச் சொற்கள் போன்றவை என்றோ, அவ்வகைச் சொற்கள் தோன்றவில்லை யென்றோ கொள்ளுதற்கில்லை. பின்னர் யாது காரணம் எனின், உயர்தனிச் செம்மொழிகளுள் ஒன்றாகிய இத்தமிழ் மொழியின் அமைப்பே அதற்குக் காரணமாக உள்ளது. எவ்வா றென்பதை இனிக் காண்போம்.

அதற்குமுன் உலக மொழிகளுள் அமைந்துள்ள சொல் — சொற்றொடர் அமைதிபற்றிய சில பொதுவியல்பினையும் அம்முறையில் தமிழ் மொழி யமைப்பினையும் காணுதல் வேண்டும்.

தொடர் மொழி என்பது சொற்களாலும் சொற்கள் எழுத்துக்களாலும் எழுத்து ஒலியாலும் ஆவதனை அறிவோம். எனவே சொற்றொடர் (செய்யுள்) என்பது பல்வேறு ஒலிகளின் இடை

யறாத தொடர்ச்சியே என்பது தெளிவு. இஃது உலக மொழிகள் யாவற்றிற்கும் பொதுவாயினும் அவ்வொலிகள் தொடர்ந்து சொல்லாக்கம் பெற்று தொடராகும் நிலையில் தம்முள் சிலபல பாகுபாடுகளையும் மரபுகளையும் அவை கொண்டு இலங்குகின்றன. அவ்வேறுபாடுகளை ஆய்ந்த ஒப்பியல் மொழி நூலார் உலக மொழிகளை மூன்று வகையாகப் பிரிப்பர். அவை

1. தனிமொழி அல்லது ஓரசை மொழி (Isolative Language)
2. புணர்மொழி அல்லது ஒட்டுநிலைமொழி (Aggulative Language)
3. உட்பிணைப்பு மொழி அல்லது குழைவுமொழி (Inflexional Language)

என்பனவாகும்.

இவற்றுள் ஓரசை மொழி என்பது சொற்கள் ஒன்றோடொன்று கண்ணுற்று இணையாமல் தனித்துச் செம்மையாக நின்று தொடர்வதாகும். அஃதாவது நீ வா பார் — யார் நீ சொல் என்றாற்போல வரும். சீன மொழிக் குடும்பத்தை இதற்குப் பெரிதும் எடுத்துக் காட்டாகக் கொள்வர்.

புணர்மொழி அல்லது ஒட்டுநிலை மொழி என்பது திணை, பால், இடம் காட்டும் உறுப்புக்களும் கால இடைநிலைகள், வேற்றுமை யுருபுகள், எதிர்மறை இடைநிலைகள் முதலியவை இணைந்து ஒரு சொல்லாய் அமைந்து தம்மொடும் முற்கூறிய தனி மொழிக ளோடும் தொடரும். தொடருங்கால் பொருள் மாறுபடா வண் ணம் நிகழும். அஃதாவது நீவந்திங்குண்பாயாக — சாத்தன் பெரிய பையன் — அவன் பஞ்சணையில் அமர்ந்தான் என்றாற் போல வரும். இத்தொடர்களை வந்திங்கு நீ உண்பாயாக என மாற்றலாம். பாயாக வந்திங்கு நீ உண் என்று மாற்றின் பொருள் வேறுபடும். பெரிய பையன் சாத்தன் என மாற்றலாம், பெரிய சாத்தன் பையன் என்றோ, பையன் பெரிய சாத்தன் என்றோ மாற்றின் பொருள் வேறுபடும். அமர்ந்தான் அவன் பஞ்சணையில் என மாற்றலாம்; அவன் அணையில் பஞ்சு அமர்ந்தான் என மாற்றின் பொருள் வேறுபடும். இவ்வாறு தொடர்வனவும் சாத்தனைக் கண்டேன், மரங் குறைத்தான் என்றாற்போலத் தொடர்வனவும் இவ்வகையில் அடங்கும். மைய ஆசிய மொழிகளும் திராவிட மொழிகளும் இதற்குப் பெரி தும் எடுத்துக் காட்டாகும்.

உட்பிணைப்பு மொழி அல்லது குழைவு மொழி என்பது வருதலைச் செய்யான் என்பது வாரான் என்றும், வெம்மைத் தன்மை யுடையவன் என்பது வேந்தன் என்றும், மலையை உடையவன் என்பது மலையன் என்றும், குழிந்தாழ்ந்த கண்ணை உடையது என்பது குண்டுகட்டு என்றும், நீ போவாயாக என்பது போதி என்றும் வரும் சொற்பிணைப்புகளைப் போலச் சொற்றொடர்கள் பிணைந்து ஒரு சொல் நீர்மைத்தாக வருவனவாம். சமற்கிருதம், மேலையாசிய மொழிகளுள் சில இதற்குப் பெரிதும் எடுத்துக் காட்டாக அமையும்.

இவ்வகையில் தமிழ் மொழிக்கண் இம்மூன்று தன்மைகளும் ஓரளவு காணப்படினும் புணர்மொழி அல்லது ஒட்டுநிலை மொழிப் பிரிவில் இதனை ஒப்பியல் மொழி நூலார் அடக்குவர். இப் பிரிப்புக்களாற் பெரிதும் பயனில்லை என்பார் இக்கால மொழி யியலார்.

தமிழ் மொழியில் அமைந்துள்ள சொற்களை நோக்கின் ஓரெழுத் தொரு மொழிகள் யாவும் தனிமொழிகளாகவும், ஈரெழுத்தொரு மொழிகளுள் சிறுபான்மை ஒட்டுநிலை மொழிகளாகவும், இரண் டிறந்திசைக்கும் தொடர்மொழிகளுள் பெயர்ச் சொற்களுள் சிறு பான்மையும் குறிப்பு வினைகள் வினைமுற்றுச் சொற்களுள் பெரும்பான்மையும் உட்பிணைப்பு மொழிகளாகவும் திகழ்வதைக் காணலாம்.

ஆயினும் தமிழ்ச் சொற்கள் ஒன்றோடொன்று தொடருங்கால்

நாழி + உரி = நாடுரி,
நாள் + அன்று = ஞான்று,
ஆதன் + தந்தை = ஆந்தை,

என்றாற்போல வடிவு திரிவனவும்

தேன் + இறால் = தேத்திறால்,
வேட்கை + அவா = வேணவா

என்றாற்போல வடிவு திரிவனவும்

ஒன்பது + பத்து = தொண்ணூறு

என்றாற்போல முழுதுந் திரிவனவும் உள. இவை சில விழுக் காடுகளே யாகும்.

கடலழகு, மரவடி, கற்கண்டு, பொற்றகடு என ஒலித் திரிபுக ளாக இணைவனவே பெரும்பான்மையாகும். ஆதலின் தமிழ்

மொழியைப் புணர்நிலை மொழி என்ற வகையில் அடக்குவது பேரளவு பொருந்துவதாகும்.

மொழி என்பது ஒலிவடிவேயாயினும் அவ்வொலி வடிவம் இறந்த காலத்தை அறியவும் எதிர்காலத்திற்கு உணர்த்தவும் பயன்படாது நிகழ் காலத்தில் அதிலும் முன்னிலைக்கண் மட்டுமே பயன்படும். இவ் இரு காலத்திற்கும் பயன்பட்டு அழியாநிலை எய்துவது வரிவடிவமே யாகும். ஆதலின் வரிவடிவைக் கொண்டு ஒலி உருவை உணரும் மக்கள் அதற்குச் சிறப்பளித்துப் போற்று கின்றனர். கடந்த கால மொழி என்பது நூல் வடிவத்தில் உள்ள வையேயாம். பழநூல்கள் யாவும் நமக்கு முன் வாழ்ந்த பெரு மக்களின் சிந்தனைக் கருவூலங்களாகும்.

எனவே கருத்துக்களைச் சொல் (ஒலி) வடிவில் தாங்கி நிகழும் மொழியை வரலாற்று மொழி மரபிற்கு மாறாகத் திரித்தாலும், சிதைத்தாலும் அவ்விழப்பு முன்னையோர்தங் கருத்துக்களுக்கே யன்றிச் சொற்களுக்கல்ல என்பதை மறத்தல் கூடாது.

நிகழ் கால மக்கள் கருத்துக்களைப் பின்வருவோர் உணர்ந்து கொள்ள வரிவடிவில் அமைத்துச் செல்லுகின்றனர். அம்முறை யில் தமிழ்ச் சான்றோர்கள் தம் கருத்துக்கள் சிதையா வண்ணம் பின்னுள்ளோர் உணர எளிமையும் இனிமையும் கட்டுக் கோப்பும் உடையதொரு நெறியில் சொற்களை அமைத்தளிக்கக் கருதிச் செய்த வடிவக் கோட்பாடே செய்யுள் வழக்கென்பதாகும்.

உரைவழக்கு முற்றிலும் நிகழ் காலத்திற்கே பயன்படுவதாலும் — வட்டாரந்தோறும் உருவம் வேறுபடுதலாலும் — சூழ் நிலைக் கேற்ப ஒலிகள் வேறுபடுவதாலும் கல்வி யறிவில்லாதார் சிதைத் தும் மாற்றியும் வழங்குவதாலும் தமிழாசிரியன்மார் எதிர்காலத் திற்குப் பயன்படுவதாகிய செய்யுள் வழக்கையே மிகச் சிறப் பாகப் போற்றுவராயினர்.

செய்யுள் என்னும் சொல்லிற்குச் செய்தல் என்பது பொருள். இத் தொழிற் பெயர் செய்யப்பட்டது என்னும் பொருளில் பா—பாட்டு— கவிதைகளை உணர்த்தும் பெயர்ச் சொல்லாக விளங்குகின்றது. இதனைத் தொல்காப்பியர் யாப்பு என்னும் பெயராலும் குறிப்பிடுவார். இதனை,

''எழுத்து முதலா ஈண்டிய அடியிற்
குறித்த பொருளை முடிய நாட்டல்
யாப்பென மொழிப யாப்பறி புலவர்'' (செய்: 74)

''பாட்டுரை நூலே வாய்மொழி பிசியே
அங்கதம் முதுசொல் அவ்வேழ் நிலத்தும்
வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின்
நாற்பெயர் எல்லை யகத்தவர் வழங்கும்
யாப்பின் வழியது என்மனார் புலவர்'' (செய்: 75)

''எழுநிலத் தெழுந்த செய்யுள் தெரியின்
அடிவரை யில்லன ஆறென மொழிப'' (செய்: 157)

என வரும் நூற்பாக்களால் அறியலாம்.

இப்பாட்டென்னும் பாவானது நால்வகைப் படுமென்பதும் அவை அறம் முதலாய மூன்று பொருளையும் பற்றிக் கூறுதற்குரிய என்பதும்,

''ஆசிரியம் வஞ்சி வெண்பாக் கலியென
நாலியற் றென்ப பாவகை விரியே'' (செய்: 101)

''அந்நிலை மருங்கின் அறமுத லாகிய
மும்முதற் பொருட்கும் உரிய என்ப'' (செய்: 102)

என வரும் நூற்பாக்களால் உணரலாம்.

இவ்வாறு வரும் செய்யுளுக்கு ஆசிரியர் முப்பத்து நான்கு உறுப்புக்களை கூறுகின்றார். அவற்றுள் மாத்திரை, எழுத்து, அசை, சீர், பா, தூக்கு, தொடை, வண்ணம் என்னும் உறுப்புக்கள் ஓசையை அடிப்படையாகக் கொண்டுள்ளன. இதனை,

''அசையும் சீரும் இசையொடு சேர்த்தி
வகுத்தனர் உணர்த்தல் வல்லோ ராறே (செய்: 10)

என்பதனாலும், எழுத்து — வண்ணம் — தொடைபற்றிக் கூறும் பிற நூற்பாக்களாலும் அறியலாம்.

இதுகாறுங் கூறியவற்றால் தமிழ்ச் சான்றோர்கள் மொழி வழக்குள் செய்யுள் வழக்கையே முதன்மையாகக் கொண்டுள்ளார் என்பதும், அச்செய்யுளுக்கு ஓசையே அடிப்படை என்பதும், அவ்வோசை எழுத்தொலிகள் இடையறவுபடாமல் தொடர்வதால் நிகழ்வதென்பதும் இடையறவு படாமல் சொற்கள் இணையும் முறைமையைக் கூறுவதே புணரியல் என்பதும், சொற்கள் இணையுங்கால் அவை ஈறும் முதலுமாகப் புணர்தலின் அச்சொற்களில் முதலும் ஈறுமாக நிற்கும் எழுத்துக்களை ஆய்ந்து வரையறை செய்துள்ளனர் என்பதும் விளங்கும்.

எனவே மொழிக் குறுப்பாகிய முப்பத்துமூன்று எழுத்துக்களுள் சில

வற்றை முதற்கண்ணும் இறுதிக்கண்ணும் கொண்டு சிலவற்றை விலக்கியதன் காரணத்தைக் காணல் எளிதாம். முதற்கண் இறுதிநிலைபற்றிக் காண்போம்.

முப்பத்துமூன்று எழுத்துக்களுள் க ச ட த ப ற எனும் வல்லெழுத்தாறும் 'ங' என்னும் மெல்லெழுத்தும் குற்றியலிகரமும் ஆய்தமும் மொழியிறுதியில் வருதல் இல்லை. காரணம்? வல்லெழுத்துக்கள் ஆறும் தடையொலிக (வெடிப்பொலிக) ளாகளின் அவை உயிர் ஒலிகளின் உந்துதலாலன்றி வெளிப்படா. அதனான் அவை உயிரெழுத்துக்களையோ குற்றியலிகரத்தையோ ஏற்றே வெளிப்படுதலின் விலக்குண்டன.

ஙகரம் நிலைமொழி ஈறாக நிற்பின் வருமொழி ககரத்தோடன்றி ஏனைய மெய்களோடு மயங்காமையானும் மரங்குறிது — கதங் கொண்டான் என மகர ஈறு ஙகரமாகத் திரிதலானும் அகர ஈற்றின் முன் விளங்கனி என இனமாக மிகுதலானும் இயல்பீறுயாது திரிபீறுயாது என மயக்கந் தோன்றுமாகலின் விலக்குண்டதுஎன்க

குற்றியலிகரமும் ஆய்தமும் சார்பெழுத்தாகலின் அவை சாரும் எழுத்துக்கள் முன்னும் பின்னும் நிற்கவேண்டி யிருத்தலின் அவை இடையேயன்றி ஈற்றிலும் முதலிலும் வாராவாயின.

அடுத்து முதனிலைப் பற்றிக் காணுங்கால் ங ட ண ர ல ழ ள ற ன என்னும் ஒன்பது மெய்கள் வருத லில்லை.* காரணம் மொழி யிறுதிக்கண் நிற்கும் பதினொரு மெய்களுடன் இவை பெரும் பான்மையும் மயங்காமையேயாம். இதனை அடுத்து வரும் மூன்றாம் அட்டவணையிற் காண்க.

அவ் அட்டவணையில் நிலைமொழி யிறுதியாக உள்ள பதினொரு மெய்களின் முன் ஙகரம் ய ர ழக்களோடும் டகரம் ணகரத்தோடும் றகரம் னகரத்தோடும் ர ழ ஒழிந்த ஏனைய தம்மொடு தாமும் மயங்குவனவாக உள. எனினும் ய ர ழக்களின் முன்வரும் ஙகரம் புணர்ச்சிக்கண் ஞகரம் போல ஒலிபெறுதலின் ஞகரம் முதற்கண் வர ஙகரம் விலக்குண்டது.

ணகர னகரங்கள் முறையே டகர றகரங்களின் இனமாகலின் மயங்கும் எனினும் ணகர னகரங்களின் முன்வரும் தகரம் முறையே டகர றகரமாகத் திரிதலின் இயல்பு யாது திரிபு யாதென்னும் ஐயந் தோன்றிப் பொருள் கவர்படுமாதலின் தகரம் முதலாக

*குற்றியலுகரமும் ஆய்தமும் பற்றி மேலே கூறப்பட்டுள்ளது.

## 3. மொழியிறுதி மெய்களோடு மயங்காதவை.

| | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஞ் | ங | ட | ண | ர | ல | ழ | ள | ற | ன | க | — | — | த | ந | ப | — | வ | 14 |
| ண் | ங | 0 | 0 | ர | ல | ழ | ள | ற | ன | — | — | — | த | ந | — | — | — | 9 |
| ந் | ங | ட | ண | ர | ல | ழ | ள | ற | ன | க | ச | ஞ | — | — | ப | ம | வ | 15 |
| ம் | ங | ட | ண | ர | ல | ழ | ள | ற | ன | க | ச | ஞ | த | ந | — | — | — | 14 |
| ன் | ங | ட | ண | ர | ல | ழ | ள | 0 | 0 | — | — | — | த | ந | — | — | — | 9 |
| ய் | 0 | ட | ண | ர | ல | ழ | ள | ற | ன | — | — | — | — | — | — | — | — | 8 |
| ர் | 0 | ட | ண | ர | ல | ழ | ள | ற | ன | — | — | — | — | — | — | — | — | 8 |
| ல் | ங | ட | ண | ர | 0 | ழ | ள | ற | ன | — | — | ஞ | த | ந | — | ம | — | 12 |
| வ் | ங | ட | ண | ர | ல | ழ | ள | ற | ன | க | ச | ஞ | த | ந | ப | ம | — | 16 |
| ழ் | 0 | ட | ண | ர | ல | ழ | ள | ற | ன | — | — | — | — | — | — | — | — | 8 |
| ள் | ங | ட | ண | ர | ல | ழ | 0 | ற | ன | — | — | ஞ | த | ந | — | ம | — | 12 |

வர டகர றகரங்கள் விலக்குண்டன. இவ்வாறே ண னக்களின் முன் வரும் நகரம் ண னக்களாகத் திரிதலின் நகரம் முதலாகி நிற்க ணகர னகரங்கள் விலக்குண்டன.

ரகர ழகரங்கள் அப்பதி னொன்றோடும் மயங்காமையின் விலக் குண்டன. ல ளக்கள் தம்முன் தாமன்றி ஏனையவற்றோடு மயங்காமையின் விலக்குண்டன என்க

அவ்வாறாயின் மொழிக்கு முதலாக வருவனவற்றுள்ளும் சில மயங்காதன உளவே அவற்றை ஏற்றுக் கொண்டமைக்குக் காரணம் யாதெனின் மயங்காதன சிலவும் மயங்குவன பலவும் ஆதலாலும் மயங்காதவை தொடருங்கால் உரிஞ் + கொற்றா என்பது சாரியை பெற்று உரிஞு கொற்றா என்றும் மரம்+குறிது என்பது இனமாகத் திரிந்து மரங்குறிது என்றும் தெவ் + மடங் கல் என்பது திரிந்து தெம்மடங்கல் என்றும், வெள் + மலர் என்பது தன்னினமாகத் திரிந்து வெண்மலர் என்றும் மயங்குதற் குரியவாகத் தொடர்தலானும் ஏற்கப் பெற்றன என்க.

இம்முறையிலும் ங ட ண ர ல ள ழ ற ன ஆகிய ஒன்பதும் மொழிக்கு முதலாகும் வாய்ப்பின்மையானும் மொழி முதல்வரும் எழுத்துக்களாகத் திரியின் அவை முன்னரே ஏற்றுக் கொள்ளப் பட்டிருத்தலினாலும் தம்முள் ஒன்றாகத் திரியின் அதனாற் பயனின்மையானும் தமிழ் மொழியமைதி காரணமாக இவை மொழி முதல் வாரவாயின என்க.

மற்று மொழிக்கு முதலாம் என்னும் ஒன்பது மெய்களுள் கதநபம என்னும் ஐந்தும் எல்லா உயிரொடும் கூடிவர ச ஞ ய வ நான் கும் சிலவற்றோடு வாராமைக்குரிய காரணத்தைக்காண்போம்.

சகர மெய் அ. ஐ. ஔ என்னும் மூன்றனோடும் வருதலில்லை. ஏன்? யகர ஞகரங்களைப் போல இடைநா இடையண்ணத்தில் தோன்றி உரசொலி பெறுவதனாலும், இவற்றை முதலாக உடைய வடசொற்கள் பெரிதும் உலக வழக்கிற் கலந்துவிட்டமை யானும் எனலாம். எனினும் தமிழ் மரபிற்கேற்பச் சொற்கள் தோன்றித் திண்மையாகப் பலுக்கப்படின் கடிசொல்லில்லைக் காலத்துப்படினே என்னும் விதியால் ஏற்றுக் கொள்வதற்குத் தொல்காப்பியம் தடையாக இராது. இதற்கு மாறாக,

''சகரக் கிளவியும் அவற்றோ ரற்றே
அஐஔ வெனும் மூன்றலங் கடையே''

என்னும் நூற்பாவை 'அவை ஔ என்னும் ஒன்றலங் கடையே' எனத் திரிப்பது பொருந்தாது. என்னை 'அவை' என்னும் சுட்டு பன்மையாதலின் என்க.

இனி எழுத்ததிகார நச்சினார்க்கினியர் உரை பதிப்பிற்குக் குறிப்புரை எழுதிய மொழியறிஞர் தேவநேயப் பாவாணர் அவர்கள் தலைக் கழக இலக்கியங்களிலே சகர முதன் மொழிச் சொற்கள் காணப்படுகின்றன என்று கூறிச் சகரத்தை முதலாக உடைய பல சொற்களைக் காட்டி நன்னூல் மயிலைநாதர் உரையைத் துணையாகச் சுட்டியுள்ளார். அச்சொற்கள் யாவும் வட சொற்களாகவும் திரி சொற்களாகவுமே உள. அன்றியும் அவர் சாப்பாடு என்னும் சொல் சப்பு என்னும் வேர்ச் சொல்லடியாகப் பிறந்தது என்றும் சப்பு என்பதில் சகரம் முதலாக வந்துள்ளது என்றும் காட்டியுள்ளார். சென்னைப் பல்கலைக் கழக அகராதியில் சாப்பாடு என்பது தெலுங்குச் சொல் என்று குறிக்கப்பட்டுள்ளது. சாப்பாடு — சப்பு என்னும் சொற்கள் முற்கால இடைக்காலத் தமிழ் இலக்கியங்களுள் யாண்டும் காணப்பெறவில்லை.

சாப்பாடு என்னும் சொல் 'சப்பாத்' என்னும் இந்துத்தானிச் சொல்லின் திரிந்த வடிவம் என்பது என் கருத்து. அதுபோலவே சப்பு என்பது Sip–Sup என்னும் ஆங்கிலச் சொற்களின் திரிபு என்பது என் கருத்து.

ஞ ஞா ஞி ஞீ ஞு ஞூ ஞே ஞை ஞோ ஞௌ இவற்றை நீக்கியதற்குக் காரணம் இவை முதலாக வரின் பெரிதும் நகரம்போல ஒலித்தலால் என்க. ஞிணம், ஞீலம், ஞேயம் முதலியன நகரப் போலியாக வழங்குதலால் இதனை அறியலாம்.

யகர வரியில் யா ஒன்றைத் தவிர ஏனைய வாராமைக்குக் காரணம் யகரம் இகரத்தின் சாயலையும் எகரத்தின் சாயலையும் பெறுதலான் என்க.

வகர வரியில் வு வூ வொ வோ. இவை உகர ஒகரங்களின் சாயலைப் பெறுதலான் நீக்கப் பெற்றன என்க.

இவ்வாறே மொழியிறுதிக் கண்ணும் சில மெய்களோடு சில உயிர்கள் கூடி வாராதுள்ளன.

அவற்றுள் எகரம் மெய்யோடு கூடி ஈறாகாமைக்குக் காரணம் ஈற்றின்கண் எகரம் மாத்திரை நீண்டு ஏகாரமாக ஒலித்தலின் என்க. மற்று ஓரெழுத் தொருமொழியாகலின் ஒகரம் நகரத்தோடு மட்டும் கூடி ஒலிக்க ஏனைய மெய்களின் மேல் ஓகாரமாகவே ஒலித்தலைக் காணலாம். ககர வகரத்தோ டன்றி ஔகாரம் மொழியிறுதிக்கண் வாராமைக்குக் காரணம் ஏனைய மெய்களின் மேல் ஏறி ஓரெழுத் தொருமொழி தோன்றாமையே என்க.

உ ஊகாரம் நகர வகரங்களோடு கூடி ஈறாகாமைக்குக் காரணம் நு நூ இவற்றை ஈறாக உடைய வட சொற்கள் உலக வழக்கிற் கலந்து விட்டமையானும் அவை றன்னகரமாகத் திரிந்து வழங்குதலானும் எனலாம். வு வூ இரண்டும் தொழிற்பெயர் விகுதியாகவும் ஆகார இறுதி குறுகிய பெயர்களின் சாரியை யாகவும் வரும் உகரம் உடம்படு மெய் பெற்று 'வு'கரமாக நிற்பதனாலும் அதுவே நீளுதலாலும் இவற்றை இயல்பீறாகப் பெற்ற சொற்கள் தமிழ் மொழியில் அமையவில்லை என்க.

மேலும் இறுதியாகி நிற்கும் எனப்பட்டவற்றுள் பலவற்றுக்கு இக் காலை சொற்கள் காணப்பட வில்லை. எனவே, விலக்கப் பட்டனவற்றிற்காகப் பரிவதில் யாதும் பயனில்லை என விடுக்க.

இதுகாறுங் கூறியவாற்றான் தமிழ்மொழியானது எளிதாகப் பலுக்கு வதற்கேற்ற சொற்களால் ஆகியதோ ரியற்கை மொழி என்பதும் ஓசையும் ஒலியும் பொருளும் இனிது ஒத்துத் தொடர்வதற் கேற்ற எழுத்துக்களையே சொற்களின் முதலும் ஈறுமாகக் கொண்டு திகழும் ஒட்டுநிலை மொழி என்பதும், மயங்கா ஒலி யெழுத்துக்களை வலிந்து பலுக்கின் இதன் யாப்பமைதியும் ஓசை நயமும் கெடும் என்பதும் அதனால் அறுவகைச் செய்யுளும் ஓசை யழிந்து உரைநடையாய் மாறி மரபழியும் என்பதும் அயன்மொழிச் சொல் இவை செந்தமிழ்ச் சொல் இவை எனப் பிரித்துணர இயலாமற் போவதோடு வருங்கால மொழியியலார் இதனையும் ஒரு திசை மொழி என ஆராய நேரும் என்பதும் ஆரியத்தின் வழிவந்த தென எளிதாக யாவரும் உரைக்கும் அவல நிலை எய்தும் என்பதும் தமிழ்ப்பண்பாடு — நாகரிகம் — தனித்தன்மை என்புவெல்லாம் வெற்றுரையாய் விடும் என்ப தும் பிறவும் புலனாம்.

''வாள்போற் பகைவரை அஞ்சற்க அஞ்சுக
கேள்போற் பகைவர் தொடர்பு.''

எனவே தொல்காப்பியம் கூறும் எழுத்தியல் மரபுகளை நன்கு கடைப்பிடித்தல் நமது கடனாம். அம்முறையாலேயே பல் லாயிரக் கணக்கான சொற்களை உருவாக்க முடியும். அதற் கேற்ற பற்றுள்ளமும் பரந்த அறிவும் பெற்றுச் சிந்தனையை வளர்த்துப் புதிய கண்டுபிடிப்புக்களை படைத்தற்கு முயலுதல் வேண்டும்.

இன்றியமையாதெனப் பிறமொழிச் சொற்களை ஏற்கும்போது தமிழ் ஒலி மரபு சொல்லாக்க மரபுகள் பிறழாவண்ணம் சமைத்து ஏற்றுக் கொள்வதில் தவறில்லை. இதுவே தமிழர்க் குச் சிறப்பும் தமிழ் மொழிக்குச் செழிப்புந் தரவல்ல நெறியாகும்.

''மரபுநிலை திரியின் பிறிது பிறிதாகும்.''

வாழ்க தமிழ்.